தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி—1 | தி.பி.2014 | மடங்கல் 19 | (4-9-1983) | விலை 65 காசு — | இதழ் எண் 23 | பக்கம் 36 38

இந்திரா அரசு, இலங்கைத் தமிழீழச் சிக்கலை, விரைவில் தீர்வு செய்யவில்லையானால்,

இங்குள்ள தனித்தமிழ்நாட்டுச் சிக்கலை மிகக் கடுமையாக எதிர்நோக்க வேண்டியிருக்கும்!

நடுவணரசுக்குப் பாவலரேறு எச்சரிக்கை!

சென்னை செப். 1: தமிழர்கள் உலகில் மிகவும் பழைமையான இனத்தைச் சேர்ந்தவர்கள். தொன்மையான நாகரிகம் படைத்தவர்கள். இன்றைக்கு உலகில் உள்ள நாகரிகங்கள் அனைத்திலும் அவர்களது நாகரிகத்தாக்கம் இல்லாத ஓர் இன நாகரிகமே இல்லை. அதுபோலவே அவர்களின் கலையியலும் பண்பாட்டியலும் மிக மிகப் பழைமையானவை. அவர்களது மொழியும், உலகில் உள்ள அனைத்து மொழிகளுக்கும் மூல முதன்மையானது. சமசுக்கிருத மொழி எவ்வளவு பழைமையானதோ, அதை விடப் பத்து மடங்கு பழைமையானது தமிழ்மொழி. சமசுக்கிருதத்தில் தமிழ் மொழியின் சொற்களும் சொல் மூலங்களும் எண்பது விழுங்காட்டிற்கும் அதிகம். இத்துணைப் பழைமையும் சிறப்பும் முதன்மையும் வாய்ந்த மொழியையும், தொன்மைப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் படைத்த அதன் இனத்தையும் இன்று, அரசியலாலும், பொருளியலாலும், குமுகாயத்தாலும், கலை, பண்பாட்டாலும், மொழியாலும் அடிமைப்படுத்தி அழித்துக் கொண்டிருக்கின்றது ஓர் இனம் என்றால், இஃது எத்துணை இரங்கத்தக்க கொடுமை வாய்ந்த ஓர் உண்மையாக இருக்கிறது. உலகில் தமிழினம் அவ்வாறு கொடுமைப்படுத்தப்படும் நாடுகள் இரண்டு. ஒன்று தமிழ்நாடு; மற்றொன்று இலங்கை!

இந்திய ஒற்றுமை, பாரதப் பண்பாடு என்றெல்லாம் பெருமை பேசித் தமிழையும் தமிழினத்தையும் நாலாந்தர ஐந்தாந்தர நிலையில் வைத்துள்ளது இந்தியா. இதன் முழு ஆட்சியையும் ஆரியம் தன் தந்திரத்தாலும், அரசியல் சூழ்ச்சியாலும், மதப் புரட்டுகளாலும் கைப்பற்றிக் கொண்டு, இந்நாட்டின் மிகப் பழமையான உரிமையின மக்களை தமிழர்களை—அவர்கள் தம் நிலையினின்று ஒரு சிறிதும் மீளாதவாறு மிகவும் அடிமைப்படுத்தி வைத்துக் கொண்டிருக்கின்றது இந்தியாவின் ஆரியப் பார்ப்பன அரசு. இந்த அடிமை நிலையின் முழு இழிவையும் இயலாமையையும்; அண்மையில், தமிழீழத்தில் அடித்து, நொறுக்கி, அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தன் இன மக்களுக்கு ஒரு வகையிலும் நேரிடையாக உதவ முடியாமற் போன பொழுதே, தெள்ளத் தெளிவாக உணர முடிந்தது. என்ன கொடுமை! தாம் வணங்கத்தக்க பெற்றோர்கள் முன்னிலையிலும், தாம் பேணத்தக்க தம் உடன் பிறப்புகள் முன்பும், தாம் வழிப்படத் தக்க தம் அன்புக் கணவன்மார்கள் எதிரிலும் தமிழ்ப் பெண்கள், ஆ! எவ்வாறு கதறக் கதறக் கற்பழித்துச் சீரழிக்கப் பெற்றுச் சிதைக்கப் பெற்றார்கள்! அவ்வாறு அவர்கள் சிதைக்கப் பெற்ற பொழுது, எப்படி அவர்கள் குமுறித் துடிக்கும் நெஞ்சோடும், தமைந்துருகும் உயிரோடும், செயலற்ற உடலோடும் ஒன்றும் செய்ய இயலாதவர்களாய் உணர்விழந்து கரைந்தார்களோ, அப்படித்தான், இத்தமிழ் நாட்டில் உள்ள ஐந்து கோடித் தமிழர்களும் (தேசியம் பேசும் இந்திரா அடிமைகள் தவிர) நைந்தழிய வேண்டியிருந்தது. இந்த நிலையில் தமிழர்கள் எப்படி ஓர் உரிமை நாட்டில் வாழ்வதாக ஒப்ப முடியும்? இனி இந்தியாவில் தமிழர்கள் எப்படி அடிமைகளாக வைக்கப்பட்டு இருக்கின்றார்களோ, அப்படியே இலங்கையிலும் தமிழர்கள் அடிமைகளாக வைக்கப்பட்டிருப்பதுடன் மிகக் கொடுமைக்கும் இழிவுக்கும் அழிவுக்கும் ஆளாக்கப்பட்டிருக்கின்றனர். அதற்கு அண்மையில் அங்கு நடந்த இனக் கலவரங்களும் அழிவுகளுமே மிகத்தெளிவானவெளிப்படையான சான்றுகளாகும்!

உலகில் தமிழர் வாழும் ஏறத்தாழ நாற்பத்தேழு நாடுகளில், மேற்கூறிய இரண்டே இரண்டு நாடுகளில் மட்டுமே அவர்கள் முழு ஆளுமை உரிமைபெற முடியும், ஏனெனில் அவையிரண்டுமே இன்றைய நிலையில் அவர்களின் தாய் நாடுகள். வரலாற்று அடிப்படையில் இந்த இரண்டு நாட்டிலும் அவர்களுக்குள்ள ஆளுமை உரிமையை, வேறு எந்த நாட்டு அரசாலும் இனத்தாலும் மறுத்துவிடவோ, அல்லது மறைத்துவிடவோ முடியாது.

கடந்த காலங்களில் தமிழினத்துக்கு நேர்ந்த வாழ்வுரிமைத் தாக்கங்களால், மீண்டும் இவ்வினத்துக்கு, உரிமை உணர்வு இக்கால் கிளர்ந்தெழுந்துள்ளது அவ்வுணர்வைச் செயற்படுத்துவதற்குரிய முழுத் தகுதியும் முழுவுரிமையும் வாய்ந்தவர்கள் தமிழ் நாட்டிலும், தமிழீழத்திலும் வாழ்ந்து வரும் தமிழர்களே! இரண்டு நாடுகளிலுமே அவர்கள் நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் தோன்றியதும் இவ்விரு நாடுகளையும் உள்ளடக்கிய இலெமுரியா என்னும் இந்நிலப்பகுதியிலேயே ஆகும்! எனவே அவர்களின் இனவுரிமைத் தாக்கத்தையும் வாழ்வுரிமைச் சிக்கலையும் முன்வைத்து ஆட்சியுரிமைக் கோரிக்கைக்கு எழுச்சிக் குரல் கொடுப்பார்களேயானால் அவர்களைத் தடுத்து நிறுத்திவிடவும் அவர்களின் உரிமைக் குரலை ஒடுக்கிவிடவும் உலகில் இன்றுள்ள எந்த ஆற்றலாலும் இயலாது. அந்த அளவுக்கு இந்நிலவுநண்டைப் பகுதியில் நிலவுரிமை படைத்தவர்கள், அவர்கள்!

தமிழர் வாழ்வுரிமை பெறத் தக்கனவாகிய மேற்கண்ட இரண்டு நாடுகளில், இன்றைய நிலையில் இலங்கை வாழ் தமிழர்களே ஆட்சியுரிமைக்குப் போராடும் வகையில் கிளர்ச்சியுற்றுப் போராடத் தலைப்பட்டுள்ளனர். அவர்களின தமிழீழத் தனி நாட்டுப் போராட்டம பல்வேறு அரசியல் உரிமைக்குப் பின்னர் வடிவம் பெற்றதாகும். அது கடந்த முப்பத்தைந்தாண்டுக் காலமாக நடந்து வருவது. அவ்வகையில் இலங்கைத் தமிழினச் சிறுபான்மையரை ஒடுக்கி அடக்கி ஆண்டு கொண்டுள்ள, சிங்களப் பெரும்பான்மையினம், அங்குள்ள தமிழரை முற்றாக அழிப்பதற்கே திட்டமிட்டுள்ளது என்பதைக் கடந்தகால இன அழிப்புக் கலவரங்களைக் கொண்டு அறிய முடிகிறது.

கடந்த சூலை மாதக் கலவரம் இதுவரை அங்கு நேர்ந்த கலவரங்கள் அனைத்துக்கும் கொடுமுடியானது; கொடுமையானது. அரசு, படைத்துறை, காவல்துறை, சிங்கள மக்கள் ஆகிய நான்கு ஆற்றல்களும் ஒருமுகமாக அங்குள்ள தமிழர்களுக்கு எதிராக நின்று, நேரடியாக அவர்களை அழிக்கத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில், இவ்வினப் போராட்டத்திற்கு ஒரு முடிவு காண இன்று இந்தியா அதில் தலையிட்டுள்ளது. அதன் தலையீடு நல்ல நோக்கத்துடன் அமைந்ததாக, அதன் நடைமுறைகளைக் கொண்டு கணிக்க முடியவில்லை. அதன் தொடக்கமே தமிழீழக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் தமிழீழம் தனியே பிரிந்தாலன்றி இலங்கையிலுள்ள தமிழர்கள் தங்கள் உரிமையைப் பெறுதற்கு வழியே இல்லை; அந்த நம்பிக்கையெல்லாம் கடந்த கால இனக் கலவரங்களின் வழி முழுதுமாக அழிக்கப்பட்டு விட்டன. தமிழீழக் கோரிக்கையின் வெற்றியில்தான் எதிர்காலத் தமிழினத்தின் வாழ்வே அமைந்து கிடக்கிறது. அடிமையுற்றுக் கிடக்கும் தமிழினத்திற்கு. இவ்விரண்டு உரிமைத் தகுதி பெற்ற நாடுகளில் ஒன்றேனும் தன்னரசு பெற்றால் தான், எதிர்கால முன்னேற்றத்திற்கு வழியுண்டு. எனவே, இரண்டு நாடுகளில் முன் விழிப்புள்ள தமிழீழக் கோரிக்கையை வெற்றி பெறச் செய்வதில் உலகத் தமிழினம் முழுவதுவாக முனைந்து பாடுபடுவது ஒரு தேவையும் காலத்தின் கட்டாயமுமாக அமைந்து விட்டது.

ஆனால், தமிழீழக் கோரிக்கையின் வெற்றி, அதன் அண்டை நாடான தமிழ் நாட்டிலும் ஒரு தன்னாட்சிக் கோரிக்கையை எழுப்பி விடுமோ என்று இந்திரா அரசு அஞ்சுவதாகத் தெரிகிறது. இந்த அச்சத்தின் அடிப்படையில் அது தமிழீழக் கோரிக்கை வெற்றிக்கு முழு அளவில் உதவுவது என்பதும் ஒரு கனவேயாகும். எனவே அதன் முயற்சி தமிழிழ விடுதலைக்கு எவ்வகையானும் பயன்படவே முடியாது. அவ்வாறின்றி, அது தமிழீழக் கோரிக்கை தவிர்த்த வேறு தீர்வுக்கு முயற்சி செய்வதைத் தமிழர்கள் எள்ளளவும் ஏற்க மாட்டார்கள்,

இந்த இக்கட்டான இன அழிவுச் சூழலில் இந்திய (இந்திரா) அரசுக்கு நாம் கூறுவ

(3-ஆம் பக்கம் பார்க்க)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

உண்மையாகச் சொல்ல வேண்டுமானால்...!

(உள்ளூர், வெளியூர் அன்பர்கள் அவ்வப்போது அலுவலகம் வந்து பாவலரேறு அவர்களிடம், தமிழீழக் கொடுமைகளைப் பற்றிக் கேட்ட கேள்விகளில் சிலவற்றையும் அவற்றிக்கு அவர் கொடுத்த விடைகளையும் இங்குத் தொகுத்துக் கொடுத்துள்ளோம். அன்பர்கள் அவற்றை மிகக் கவனத்துடன் படித்து, உண்மைகளை விளங்கிக்கொள்ளக் கேட்டுக் கொள்கிறோம். உண்மை அவர்களுக்கு இப்பொழுது விளங்கவில்லையெனில், காலப்போக்கில் அது விளங்கும். அதுவரை பொறுமையுடன் இருக்கவும்.

— துணையாசிரியர்)

கேள்வி: காமராசு பேராயக் கட்சித் தலைவர் திரு. நெடுமாறனைப் பற்றியும், தமிழக மேலவைக் கொறடா பதவியை விடுத்துள்ள திரு. சனார்த்தனம் பற்றியும் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்?

விடை: அவர்கள் இருவரும் இலங்கைத் தமிழர் விடுதலை முன்னணியின் அரசியல் வண்டியில் பூட்டப் பெற்ற இரண்டு காளைமாடுகள்,

கேள்வி: திரு. நெடுமாறனின் நீண்ட கால்நடைச் செலவு எப்படிப்பட்டது?

விடை: அது அரசியல் நோக்கம் கொண்டது. அதால் தமிழர்களுக்குக் கிடைத்த நன்மையைவிட இங்களவர்க்குக் கிடைத்த நன்மை அதிகம்!

கேள்வி: தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணிக் கட்சியின் சென்னைக் கிளையின் தலைவராக திரு. சனார்த்தனம் அமர்த்தப்பட்டுள்ளாரே அது பற்றி உங்கள் கருத்தென்ன?

விடை: அவரை முன்னணி அமர்த்தியது என்பதைவிட, காலப் பரபரப்பைப் பயன்படுத்திக் கொண்டு, அப்படி ஒரு தேவையை உருவாக்கிக் கொண்டனர் முன்னணி முகாமையர்.

கேள்வி: இலங்கைக் கலவரத்தின் தொடக்கத்தில், அங்குள்ள தமிழர் விடுதலை முன்னணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பதவி விடுப்புச் செய்ததாகச் செய்தி வந்ததே!

விடை; கலவரக் காலப் பரபரப்பில் மக்களிடம் நன்மதிப்புப் பெறும் நோக்கத்துடன் திட்டமிட்டு அறிவிக்கப் பெற்ற பொய்ச் செய்திகள் பலவற்றுள் இதுவும் ஒன்று.

கேள்வி: இலங்கைக் கலவரத்தின் போது, பாராளுமன்ற உறுப்பினர்கள் பதினாறு பேரும் தலைமறைவாக இருந்ததால் தப்பித்துக் கொண்டார்கள் என்று கூறப்பட்டதே, எப்படி?

விடை: ஆமாம்! அரசியல்(!) மணலில் தங்கள் தலைகளைப் புதைத்துக் கொண்டார்கள்!

கேள்வி: இலங்கையிலிருந்து இந்திராகாந்தியைச் சந்திக்க இந்தியா வந்த தமிழர் முன்னணிக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் தாம் மிகவும் தொல்லைப்பட்டு மிகுந்த எச்சரிக்கையுடன் இங்கு வந்ததாகச் செய்தியாளர்களிடம் சொல்லிக் கொண்டாரே!

விடை: ஆமாம்! அப்படிப்பட்ட கொடுமைகளிலிருந்து நீங்கள் மட்டும் அல்லது உங்களைச் சேர்ந்தவர்கள் மட்டும் எப்படி உயிருடன் இருக்கிறீர்கள் என்று ஒரு கேள்வி கேட்கப்பட்டு விடக் கூடாது அல்லவா?

கேள்வி: இலங்கைத் தமிழர்களின் கொடுமைகளுக்கு இந்திராகாந்தி எடுத்த, எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

விடை: அவை நூற்றுக்குத் தொண்ணூறு பங்குச் செயவர்த்தனேவுக்கும், பத்து பங்கு அங்குள்ள தமிழினத்துக்கும் சார்பானவை. ஆனால் அதை மக்கள் வெளிப்படையாகத் தெரிந்து கொள்ளாதபடியும், எதிர் நிலையாகக் கொள்ளும்படியும் செய்தது அவர் அரசு தந்திர நடவடிக்கையாகும்!

கேள்வி: தமிழகக் கலவரத்தின் போது தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பற்றியும், அது நடத்திய ஒருநாள் கடையடைப்புப் பற்றியும் உங்கள் கருத்தென்ன?

விடை: அதைக் கூட செய்திருக்கவில்லையானால் அது தமிழர்களுக்கு எதிரான அரசு என்றன்றோ மக்கள் கருதியிருப்பார்கள்?

கேள்வி; கலைஞர் கருணாநிதியும், பேராசிரியர் அன்பழகனும் தமிழீழக் கொடுமைகளைக் கண்டித்துப் பதவி விடுப்புச் செய்துள்ளார்களே!

விடை; காலங் கருதி, வரலாறு கருதி இதைவிட இன்னும் வெளிப்படையாகச் சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கலாம். ஆனால் இத்தக் கால கட்டத்தில், அக்கட்சி உள்ள சூழ்நிலையில், எளிதாகச் செய்ய முடிந்தது இதுதான்!

கேள்வி: திரு. அமிர்தலிங்கம் இந்திராகாந்தியிடம் நடத்திய பேச்சுத் தீர்வு பற்றி உங்கள் கருத்து?

விடை: செயவர்த்தனேயின் அரசியல் நாடகத்தில் இந்திரா காந்தியின் அரசியல் நோக்கும் அமிர்தலிங்கத்தின் அரசியல் நோக்கும் சந்தித்துக் கொள்ளும் முதற் காட்சி அது! அதால் தமிழர்களுக்கு நிலையான பயன் எதுவும் கிடைத்துவிட முடியாது.

கேள்வி: இலங்கைக் கலவரங்களுக்குப் பின்னால் திரு. அமிர்தலிங்கத்தின் இப்பொழுதைய நிலை என்ன?

விடை: கலவரத்தின் முழுப் பயனையும் தமக்கே உரித்தாக்கிக் கொண்டு உலகத் தலைவர்களில் ஒருவராக அவர் உயர்ந்து நிற்கிறாரே!

கேள்வி: இலங்கையில் ஏற்பட்ட கொடுமையான கலவர நிலைகளிலும் இலங்கை எதிர்க் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர்க்காகிலும் ஒரு தீங்கும் நேரவில்லையே, எப்படி?

விடை: செயவர்த்தனேவுக்கும், திரு. அமிர்தலிங்கத்திற்குமே வெளிச்சம்!

கேள்வி: இந்தியத் தூதர் பார்த்தசாரதியின் பாதுகாப்பில்தான, செயவர்த்தனேவுடன் பேச்சு நடத்த அமிர்தலிங்கம் இந்தியாவிலிருந்து இலங்கை செலவதாகக் கூறியிருக்கிறாரே!

விடை: யாரிடமிருந்து பாதுகாப்பு என்று அவர் சொல்லவில்லையே!

கேள்வி: கொழும்பில் தற்போது உள்ள சூழ்நிலையிலும் அஞ்சா நெஞ்சத்துடன் சிக்கலுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற அக்கறையுடன், திரு. அமிர்தலிங்கம் கொழும்புக்குச் சென்றிருப்பதாக திரு. சனார்த்தனம் தெரிவித்துள்ளாரே!

விடை: தலைவர் மெச்சும் சிறந்த செய்தியறிவிப்பாளர்!

கேள்வி: திரு. அமிர்தலிங்கம் 'தினகரன்' செய்தியிதழ் அலுவலகம் சென்று அதன் ஆசிரியரைப் பார்த்ததாகப் படம் வெளியிடப்பட்டிருந்ததே!

விடை: தலைவர்கள் செய்தி அலுவலகத்தை நாடிப் போவது நல்ல நடைமுறையில்லை. செய்தியாளர்கள் தாம் தலைவர்களை நாடி வரவேண்டும்; அதுதான் நலமுள்ள அரசியலுக்கு எடுத்துக் காட்டாகும்!

கேள்வி: திரு. அமிர்தலிங்கம் அவர்கள் தமிழ் நாட்டுக்கு வந்தபொழுதெல்லாம் அவரைத் தாங்கள் சந்தித்து அளவளாவி நட்புக் கொண்டிருந்தீர்களே! இந்த முறை மட்டும் அவரை ஏன் தாங்கள் சந்திக்கவில்லை?

விடை: அவரைச் சந்திப்பதால் எந்தப் பொதுப் பயனும் விளையாது என்று கருதியதால்!

கேள்வி: 'இந்திராகாந்தியின் கொடுங்கரிசன் (கொடும்பாவி) எரிப்பு, உருவப்பட எரிப்பு போன்ற போராட்டங்களில் ஈடுபட்டது கொடூரமானது, தாங்கிக் கொள்ள முடியாதது. இதை எப்படி இசைகிறார்கள் என்று தெரியவில்லை!'. என்று பக்தவத்சலம் கூறியிருக்கிறாரே!

விடை; 1965 இந்தி யெதிர்ப்புக் காலக் கொடுங்கோலர், அவர்! அரசியலில் அணைந்துபோன கொள்ளிக்கட்டை ஏனோ இன்னும் பேசிக் கொண்டிருக்கிறது. இந்திரா காந்தியின் பட உருவ, எரிப்புகளைத் தாங்கிக் கொள்ள முடியாத இவர், இலங்கையில் உள்ள ஆயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப்படுவதையும், தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்படுவதையும் தாங்கிக் கொள்கிறாரோ? அடிமை உணர்வில் ஊறிப் போனவர்கள் வேறு வகையாக எப்படிச் சிந்திக்க முடியும்?

உ. த. மு. க. அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

உ.த.மு.க. முதல்வரும், 'தமிழ்நிலம்' பொறுப்பாசிரியருமாகிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் அடுத்த சில நாட்களில் ஐரோப்பிய நாடுகளுக்கு இயக்க அமைப்பு குறித்துச் சுற்றுச் செலவு ஒன்று மேற்கொள்ள விருக்கின்றார்கள். அவர்கள் சுற்றுச் செலவு முடிந்து திரும்பியவுடன் தமிழ்நாடு முழுதும் உள்ள மாவட்ட, வட்டக் கழகங்களையும் தோற்றுவிக்க எண்ணியுள்ளார்கள். அப் பணியில் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்வதுடன், அப்பணி வெற்றிபெற, இப்பொழுதிருந்தே முழுமூச்சுடன் அனைத்து ஊர்களிலும் அன்பர்களை அணியப்படுத்துமாறு வேண்டிக் கொள்கிறோம்!

ஈழத் தமிழனுக்கு இரங்கல்

'ஆழியோன்'

ஈழத் தமிழனே! உன் துயரக் கதை எங்கள் நெஞ்சைப் பிழிகின்றது!

ஆட்டிற்கும் இரக்கம் காட்டி அணைத்துச் சென்றான் புத்தன்! அவன் வழியில் நடப்பவரோ விலங்கையும் தலைகுனிய வைத்தார்! இத்தனைக்கும் நீ செய்த தப்புதான் என்ன?

பாறையைப் பிளந்து நீரைக் காண்பது போல் மலையும் காடுமாய் மண்டிக்கிடந்த கடல்சூழ் நிலத்தைக் கனிவளச் சோலையாக்கினாய்!

புல்லும் முளையாத காட்டையும், கல்லே நிறைந்த மேட்டையும், மாடாய் உழைத்து நாடாய்த் திருத்தினாய்;

குருதியை உறிஞ்சும் அட்டையுடன் போரிட்டுத் தேயிலைத் தோட்டங்கள் சமைத்தாய்!

கொசுக்களின் கடியையும் கொடிய அரவுகளின் தீண்டல்களையும் தாங்கிக்கொண்டு குளம்பித் தோட்டங்கள் கண்டாய்!

குற்றமா இவை? இதற்கா தண்டனை? கொம்பேறி மூக்கன்கள் சிந்திக்கவேண்டும்!

ஈழம் உனக்கு இன்னொருவர் மண்ணன்று! உன் தாய் தவழ்ந்தது, தந்தை வாழ்ந்தது, நீ தளர்நடையிட்டு வளர்ந்தது!

அன்றொருநாள் ஆண்டவன் இராவண்ணன்! வேறு யாருமல்லன் அவன்! உன் கொள்ளுப் பாட்டனே!

அவன் வழித் தோன்றி அடிமையாய் வாழ்வது அழகேயன்று, எனவே தனிநாடு கேட்பது தவிர்க்க முடியாத பிறப்புரிமை!

கொடுக்க மறுப்பதுடன் கொலைகளும் செய்பவன் முடக்கப்படுவான் ஒருநாள், தொலைவிலில்லை அது!

உங்களை விரட்டும் சிங்களவன் யார்? வரலாறு சொல்கிறது வயிறு வளர்க்க கலிங்கத்திலிருந்து ஓடி வந்தவன் என்று!

அந்தக் கலிங்கம், இன்று ஒரிசா. உருப்படுவானா பயல்?

ஒண்ட வந்த பிடாரி, ஊர்ப் பிடாரியை விரட்டியது பொய் அன்று! உண்மை! உண்மை! உண்மை!

சொந்த வீட்டில் உரிமைகள் பறிக்கப்படுகின்றன! சோற்றுக்கு வழியில்லாமல் ஏதிலிக் கொட்டடியா?

ஐயோ!

தெருவில் நடந்தால் உன் குருதியால் நனைகிறது மண் வண்டியில் சென்றால் மறைந்து சுடுகிறான் கொடியவன்! மக்களைக் காக்கும் பட்டாளமா அது?

சிறையில் இருந்தாலும் விடுவதில்லை. சிங்கள நாய் உன்னை! பூட்டுகள் உடைக்கப்பட்டு மண்டைகள் நொறுக்கப்படுகின்றன!

பள்ளி சென்ற குழந்தைகள் இல்லம் வருவதில்லை! துள்ளி விழுகின்றன, தெருவில் சுடப்பட்டு!

வீடுகள் எரிகின்றன; உடைமைகள் அழிக்கப்படுகின்றன! தோட்டத்தில் உழைப்போர் தொகை தொகையாய் மறைகின்றனர்!

உயிரினும் மேலாக, உன்னைக் கருதும் மனைவி, தாலிக் கயிற்றையும் கழற்றி மறைத்துக் கொள்கிறாள்! நெற்றிப் பொட்டையும் சட்டென்று அழிக்கிறாள்!

ஓங்கி அழ முடியவில்லை, உன்னைப் பெற்றவளால், தாங்க முடியவில்லை, உன் தங்கை கற்பழிக்கப்படுவதைப் பார்த்து!

எரிகின்ற தீயில் தூக்கி எறியப்படுகிறாள், கதறக் கதற உன் தமக்கை!

ஐயகோ என் செய்வேன்? எங்கேனும் நடந்ததுண்டா இது போல்? கொடுமை! கொடுமை கோரக் கொடுமை!

ஈழத் தமிழா! நெஞ்சுரம் பெற்று வீரம் மிகுந்த விடுதலைப் புலியே! இதற்கெல்லாம் காரணம் என்ன!

சிங்களத்தைப் போல் இங்கும் நடந்திருக்கிறது! இமானுவேல் கொல்லப்படவில்லையா முதுகுளத்தூரில்?

விழுப்புரத்தில் எரிக்கப்படவில்லையா பெரியார் நகர்? வாழைப்பாடி ஈன்ற மாணிக்கம், மண்ணில் சாய்க்கப்படவில்லையா?

கீழ் வெண்மணியை மறந்திருக்க மாட்டாய்! குடிசைகளுக்குத் தீ வைத்துக் குழந்தை ஆண், பெண்களைப் போட்டுக் குளிர் காயவில்லையா நாங்கள்?

ஏன் தெரியுமா? சேரியில் பிறந்தவர்களாம் அவர்கள்! காரணம் எப்படி?

அப்படிப் பார்த்தால் ஔவை யார்? வள்ளுவன் யார்? ஆண்ட இராவணன் யார்? நந்தன் யார்? ஞானவெட்டியான் யார்?

இன்று நேற்றன்று; என்றும் உள்ள உண்மை!

குலத்தால், நெறியால், நிறத்தால் வெறிகொண்டு கொல்வது எத்தனைக் கொடுமை! மடமை! பேதைமை!

இங்கே இவர்கள் கொல்லப்பட்ட கரிசுக்குத்தான் பலியாகின்றீர்களோ நீங்கள்? பழி ஓரிடம், விளைவு ஓரிடம்!

அங்கே கொல்லும் சிங்களவனுக்கும் இங்கே கொன்ற கொடியவனுக்கும் என்ன வேறுபாடு?

இத்தனை இருந்தாலும் இதனால் நைகிறது உள்ளம், உன் துன்பம் கண்டு துவண்டு போகிறோம்!

(4-ஆம் பக்கம் பார்க்க)

உணரும் நாள் எந்நாள்?

பாண்டியன் தலை நகராம் மதுரையில் 14-6-83 அன்று ஆளுங் கட்சியாம் அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகப் பொதுக் கூட்டம். அதில் அக்கட்சியின் பொறுப்புள்ள ஒரு பழம்பெரும் புள்ளியின் விளாசல்! காமராசர் பேராய (காங்கிரசுக் கட்சியின் சட்ட மன்ற உறுப்பினர் திரு. பாரமலையைத் தரக் குறைவான சொற்களால் மேடையேறி வசைப்பாட்டு. அம்மட்டுமின்றித் திரு. பாரமலை அவர்களின் சாதியை மிகப் பழிப்பாகவும இழிவாகவும சாய்கடையில் மலங்கலந்ததற்கொப்பான சொற்களால் ஏசல்!

இக்கொடுமையைக் காமராசர் பேராயக் கட்சித் தொண்டர் திரு. சேதுராமன் அவர்கள் கண்டிக்கும் வகையில் பொறுப்புள்ள அதிகாரிகட்கு வேண்டுகோள் தந்திருக்கிறார். சூன், 30 ஆம் பக்கலுக்குள் நடவடிக்கை எடுக்காவிட்டால் தாம் தம்மை மாய்த்துக் கொள்ளப்போவதாகவும் தெரிவித்திருக்கிறார். அனைவருக்கும் தெரியும்தானே, எப்போதும் போல் எந்த வகை நடவடிக்கையும் இல்லை. **சூலை 1 ஆம் பக்கல் திரு. சேதுராமன் அவர்கள் கீழைச் சித்திரை வீதியிலுள்ள காந்தியார் சிலை அருகில் தம்மைத் தீயிட்டுக் கொண்டார். மருத்துவ மனையிற் சேர்க்கப்பட்ட அவர் அங்கு மாண்டு போனார்.**

மூவேந்தர் மரபினரான அழுத்தப்பட்ட—ஒடுக்கப்பட்ட—தாழ்த்தப்பட்ட அந்த மக்களை யாரோ இனந்தெரியாத ஓர் உயிர் இழிவு படுத்திப் பேசுவதோ? இதைக் கேட்டுப் பதைத்து மனம் நொந்து அறிக்கை விட்டவர் கலைஞர் ஒருவரே! அதைத் தொடர்ந்து கண்டித்தவர் திரு. குமரி அனந்தன் அவர்கள்.

பண்பாட்டிலும் நாகரீகத்திலும் சிறந்தது தமிழினம் என்று பெருமைபட்டுக் கொண்டிருக்கிறோம், நாம். இந்த இனத்திடையே இது போன்ற கடையர்களும் இருக்கிறார்களே! என்ன கொடுமை! ஏ தமிழ் நாடே; எப்பொழுது முன்னேறப் போகிறாய்? எங்கள் தமிழினமே எப்படி நீ உருப்படப் போகிறாய்?

ஒன்று மட்டும் உறுதி. வேந்த மரபினராம் அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களால்தான் இந்த நாட்டுக்கு ஒரு வழி பிறக்கப் போகிறது. அதுவரை அவர்களின் நிலையிலேயேதான் இந்த நாடு அழுத்தப்பட்டு, ஒடுக்கப்பட்டு, அடிமைப்பட்டுக் கிடக்கப் போகிறது. இதை அனைவரும் உணர்தல் வேண்டும்

—நம் செய்தியாளர் **நன்னன்**

"இனக்கொலைதான் பரிசா"

—இறையரசன், சின்னதாராபுரம்

ஒருமைப்பா டென்கின்ற வலையுட் பட்டே
ஓங்கியெழும் உரிமைபற்றோம்! இலங்கைத் தீவில்
கருகுகின்ற எந்தமிழர் பிணத்தின் வாடை
கடல்தாண்டி அடிக்கிறதே! உயிரும் ஊனும்
உருகுகின்ற மெழுகாகித் துடிக்கின் றோம்நாம்.
உணராமல் நமையாளும் இந்தி ராவோ
அருளின்றிக் கல்நெஞ்சம் காட்டுகின்றார்;
ஐய்யோ செந்தமிழன் ஏதில் லானோ?

உரிமைபெற்ற தமிழரசு நமக்கி ருந்தால்
ஒருநொடிக்குள் கடல்தாண்டிச் சிங்க ளத்து
நரிகளினை நாய்வென்று தமிழர்க்(கு) ஈழ
நாடமைத்துக் கொடுத்திருப்போம்! ஆனால் இன்றோ,
உருகுகின்ற வெண்ணெய்தனைக் காவல் காக்கும்
ஊமையராய்க் கையிலராய் உழலு கின்றோம்!
பெருகுகின்ற தமிழன்விழி நீர்து டைக்கப்
பேருலகில் அறமுணர்ந்தோர் இல்லை யாமோ?

வங்கத்தைப் படையனுப்பி வாங்கித் தந்த
வல்லாண்மை இந்திராவே, ஈழநாட்டை
எங்குலத்திற் குரித்தாக்கப் படைய னுப்பல்
எவ்வகையில் தவறாகும்? பாலத் தீனன்
உங்குலமோ? ஆப்பிரிக்கக் கறுப்பர் எல்லாம்
உனதுறவோ? அங்கெல்லாம் அறத்தை நாட்டி
இங்குமட்டும் வஞ்சித்தல் தமிழன் என்றா?
எத்தனைநாள் இவ்வஞ்சம் யாம்பொ றுப்போம்?

இந்தியத்துள் தமிழகமும் ஒருநா டன்றோ?
இறையாண்மை செலுத்துவதும் நீயே அன்றோ?
சிந்துகின்ற தமிழினத்தின அரத்தம் உன்றன்
சிந்தையினைத் தொடவிலையோ? நெஞ்சம் கல்லோ?
விந்தியத்தின் வடக்குறைவோர் துயரத் திற்கே
விரைந்துவரும் உன்நெஞ்சம், தமிழன் என்றால்
சிந்தாதோ உனதுகண்ணீர்? சேர்ந்து வாழும்
சிறப்பினுக்கெம் இனக்கொலைதான் பரிசா? அந்தோ!

'தமிழ் நிலம்'

கிழமை இதழ்—சென்னை-5.

1. தனியிதழ் விலை உரு. 0.65
2. ஆண்டுக் கட்டணம் உரு. 36.00
3. அரையாண்டுக் கட்டணம் உரு. 18.00

ஓரிதழுக்கு உரு. 4.00 மேனி முன்பணம் கட்டும் முகவர்கள் எழுதிக் கேட்க.

தொடர்புக்கு: **தமிழ் நிலம், 5.** அருணாசலத்தெரு. சென்னை-5.

சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தினர் மேற்கொண்ட உண்ணா நோன்பு!

சென்னை-19: கடந்த 19-8-83 வெள்ளி காலை 8 மணி முதல் இரவு 7 மணி வரை சென்னைத் தொலைக்காட்சி ஊழியர்கள் சார்பில், இலங்கைத் தமிழர்களுக்கு நேர்ந்த இன்னல்களைக் கண்டித்து ஒருநாள் அடையாள உண்ணாநோன்பு, தொலைக்காட்சி நிலைய நிகழ்ச்சி உருவாக்குநரும், பாவலருமான 'கலைமாமணி' திரு. தஞ்சைவாணன் தலைமையில் நடைபெற்றது. உண்ணாநோன்பைத் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத் தொழிற்சங்கத் தலைவர் சிவபெருமாள் தொடக்கி வைத்தார்.

உண்ணாநோன்பில் தொலைக்காட்சி நிலையத் தலைமைப் பொறியாளர் சுப்பையா, தாரா சீத்தாராமன், ஏ. வேணு கோபால், கே. தியாகேசுவரன், ஏ. பழனியப்பன், எச். பிரேம் நாத், டி. சிரிதர், எசு. தண்டபாணி, கே. தெய்வலிங்கம், சி. சுப்பிரமணியம், ஏ. செகந்நாதன், டி. கண்ணன், சே.சந்திரன் எம். பூபாலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நோன்பு நோற்றவர்கள் நாள் முழுதும் அறிஞர் அருளி அவர்களின் 'சிங்கள அமர்க்களம்', ஏ.எசு. வேணு அவர்கள் தொகுத்த 'நீதிக் கட்சி சிறப்பு மலரில்' வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவற்றைப் படித்தும், கேட்டும் உணர்வு பெற்றனர்.

உண்ணா நோன்பினரைப் பாராட்டி இளைஞர் பேராயக் கட்சித் தலைவர் தங்கபாலு, இனியன் சம்பத்து ஆகியோர் மாலை அணிவித்தனர். காவல்துறைத் தலைவர் பொன். பரமகுரு 'முல்லைச்சரம்' ஆசிரியர் பொன்னடியான் திங்கள் மன்னன், மா. பொழிலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்

அன்று நண்பகலில் நடிகர்கள் விஜயகாந்த், சந்திரசேகர், எசு.எசு. சந்திரன், இராதாரவி, அம்சத்கான் முதலியோர் வந்திருந்து ஊழியர்களைப் பாராட்டிப் பேசிச் சென்றனர். நடிகர் சங்கப் பொதுச்செயலாளர் பி ஏ. கிருட்டிணன் மாலை அணிவித்தார். 'கலைப்புலிகள்' எனறு களம் காணத் துடித்த இளம் நடிகர்களைப் பாவலர் தஞ்சைவாணன் வரவேற்றுப் பேசினார். தொலைக்காட்சி அலுவலகம் கலைக்காட்சி அலுவலகமாகத் திகழ்ந்தது.

மாலை 6 மணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வந்து நோன்பினருடன் கலந்துகொண்டார், காந்தி காமராசப் பேராயத் துணைத் தலைவர் சென்னகிருட்டிணன் வாழ்த்துரைத்தார் பாவலரேறு பெருஞ்சித்திரனார் சிறப்புரையாற்றினார். மாலை 7 மணியளவில் மருத்துவர் கலாநிதி அவர்கள் நோன்பினர் அனைவர்க்கும் பழச்சாறு தந்து உண்ணா நோன்பை முடித்து வைத்தார். —நம் செய்தியாளர்

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெயருக்குத்தான் ஐந்து கோடி நாங்கள்! ஆனால் சொத்தைகள் எத்தனை தெரியுமா?

வீரம் இல்லை; மொழிப்பற்று இல்லை; விடுதலை உணர்வில்லை; வெட்கம் இல்லை; உள்ளது வெற்றுப்பேச்சுகள் மட்டுமே! வீணில் அமைந்த கைகள்!

குற்றம் எங்கள் மேல் இல்லை! என்றோ நடந்தது அது! சொரணையும் சூடும் இழந்தது! பழங்கதை!

ஆனாலும் தோழனே! இளவேனிற் காலத்தில் மரங்கள் தளிர்ப்பது போல் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கைகள் துளிர்த்திருக்கின்றன எங்களிடம்!

ஒருநாள் விழிப்போம்; உன்னைப் போல உரிமைப்போர் நடக்கும்! உறுதியாக எல்லாரும் புலிகளாய் மாறுவோம்! எதிரிகள் தூள்! தூள்!

இன்தமிழர் எங்கெங்குண்டோ அங்கெல்லாம் முழங்கும் நம் விடுதலை முழக்கம்!

உலகில் ஒருநாடு தோன்றும் தமிழனுக்காக! அது தனித் தமிழ்நாடாக இருக்கும்! தாய்மேல் ஆணை!

உங்கள் குருதியைக் குடித்த ஒவ்வொரு ஓநாயும் விடை சொல்லவேண்டும்! ஏனென்றால் உலக ஒன்றிய அவையில் உறுப்பினராக இருப்போம் அப்போது நாம்!

பண்பால் மட்டுமன்று; அன்பால் மட்டுமன்று! அறிவால் மட்டுமன்று; மறந்தாலும் நாம் யார் என்பதைக் காட்டுவோம் உலகத்திற்கு!

அதுவரை தோழனே! அமைதிகொள்! பாதுகாத்துக் கொள் உன்னை! தாக்காதே பகைவனை-ஏனென்றால் அவன் வலிவு உன்னை அழித்து விடலாம்!

துன்பங்களையும், துயரங்களையும் தோணி ஏற்றி அனுப்பிவிட்டுத் துமுக்கிகளைத் துடைத்துவை; நேரம் வரும்வரை அவை வெறுமனே கிடக்கட்டும்! நேரம் வரும்போது வெடிக்கட்டும் அவை! துணைக்கு வருவோம் நாங்கள்! நீயும் எங்களுக்குத் துணைவரத் தவறாதே! 0

உ. த. மு. க.
உறவு மடல்

ஈழ நெருப்பில் எடுத்த நினைவுகள்

தமிழ் நாடே எழுந்து நின்றது. நெடுமாறன் நடந்தார். மதுரை ஆதினம் ஆவேசப்பட்டார்; கழுத்தில் தலையில் அணிந்த 'புனிதச் சின்னங்களை' வீசி எறிந்தார்! கலைஞரும், பேராசிரியரும் பதவி துறந்தனர். சனார்த்தனம் வெகுண்டார். இப்படிக் கணலை எழுப்பினர், என்றாலும் 'இரண்டகம்' இங்கே இரட்டை இரட்டையாக இலை விட்டது! 'பிரிவினை' என்ற பேயைக் காட்டி அரட்டுகின்றனர்.

எத்தனை எழுச்சிகள். அவற்றை எல்லாம் ஏனென்று கேளாத ஆட்சி முறை. கையில் ஏதுமற்ற மக்கள் கண்ணைப் பொத்தலாம்; நெஞ்சிலே அடித்துக் கொள்ளலாம்; தலையைப் பிய்த்துக் கொள்ளலாம், வேறு என்ன செய்ய முடியும்?

வாய்கிழியப் புரட்சி பேசியவர்கள் 'பட்டினிப்போர்' என்ற படியைத் தாண்டி யறியாத கொள்கைக் கற்புடையவர்கள்! தங்கள் தொண்டர்கள் தீக்குளித்த போதெல்லாம், கண்ணீரால் துயரங்களை அவித்துக் கொண்ட தலைவர்கள் வேறு திசை காட்டத் தெரியாமல், தவிக்கிறார்கள்.

குமரி. இந்திரா போல் உருவம் செய்து எரிக்க முயல்கிறார், இதைத் தடுப்பேன் என்கிறார் 'சில தமிழர்'. முடிவு திசை தவறி ஓடுகின்றனர் முரிந்த கொள்கையால், தமிழர் மூளியாக வேண்டுமா? செறிந்த தமிழினப்பற்று எங்கே?

'இலங்கையில் தேசியச் சிக்கல்" உள்ளதெனக் காலங் கடந்து ஒப்புக் கொண்ட மார்க்சியக் கட்சிக்காரர்கள், தேசியத்திற்கு ஒரு நாடு கேட்கும் மக்களை நேசிக்கத் தெரியாதவர்களாக உள்ளனரே. இவர்களுக்குச் 'சொந்த அறிவு' கிடையாதென்பதை நாமும் நம்ப வேண்டியவர்களாகி விட்டோம்!

நேற்றுவரை 'தமிழன்' என்றால் காதைப் பொத்திக் கொண்டவர்கள், இன்று, 'தமிழா சிந்தி" என்று சுவரில் ஒட்டிக் கொள்கின்றார்கள். இவர்கள் இந்தியத் தமிழர்களாம். ஈழத் தமிழர்களுக்காக ஒன்றுபட வேண்டுமாம். ஆனால், தமிழகத் தமிழனோடு உறவு கொள்ள மாட்டார்களாம்.

தமிழகத் தமிழன் தனி வழி போகிறான். ஏன்? அவனுக்கு வயிற்று வலி. அதனால் அவனுக்கு அவனைப் புரிய முடிகிறது. நீ இந்தியத் தமிழனை அயன்மைப்படுத்திக் கொள்கிறாயே. தாக்கப்படுகிறவர் பக்கம் நிற்க மாட்டாமல் 'அரியணையில் அமர்ந்திருப்பவர்க்கு" வெற்றிலை மடித்துத் தர வேண்டுமென்கிறாய். இஃது எப்படி உணர்ச்சியுள்ள தமிழனுக்கு ஒத்துவரும்!

'ஊரோடு அழுதாளாம் ஒவாய்ச்சி' என்கிற கதைதானே இந்தியத் தமிழனின் நிலைமை. உலகத் தமிழினத்தைத் தன் குருதியாக எண்ணிக் கொதிக்கக் கற்றுக்கொள், உலக மாந்தனை, இது படியாக அமையட்டும்!!

— **பறம்பை அறிவன்**

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி — 1 இதழ் எண்: 23 பகுதி—36-38

தமிழீழ விடுதலைக்கு மாற்றுத் தீர்வு தமிழீழ விடுதலையே!

சென்ற சூலை மாதத்திலும் அதைத் தொடர்ந்தும் இலங்கையில் நடந்த, நடந்துவரும் கலவரங்களாலும், தமிழின அழிப்புக் கொடுமைகளாலும் நேர்ந்த மூவாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் கொலைகளையும், ஆயிரங்கோடி உருபாவுக்கு மேலான கொள்ளையடிப்புகளையும், அவற்றால் இரண்டு இலக்கம் தமிழர்கள் தம் வீடுகளையிழந்து, சொத்துகளை இழந்து தம் பெண்டு பிள்ளைகளையும் உற்றார் உறவினர்களையும் இழந்து, ஏதிலிகளாக ஆக்கப்பட்டு, ஏதிலியர் கொட்டடிகளில் அடைக்கலம் புகுந்துள்ளதையும், இன்னும் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்களும் விடுதலைப் போராளிகளும் இலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டுப் பல்வேறு கொடுமைகளுக்கும், உறுப்புச் சிதைவுகளுக்கும் ஆளாகிக் கிடப்பதையும் உலகமே அறியும். ஆனாலும் இக் கொடுமைகளைத் தடுத்து நிறுத்த இயலாமலும், அவற்றிற்கு வெளிப்படையாகக் கண்டனம் கூட தெரிவிக்க முடியாமலும் அனைத்துலக நாடுகளும் ஊமைகளாயும் கையற்றுப் வெறுமனே வருத்தம் தெரிவித்துக் கொண்டுள்ளதையும் நாம் அறிவோம்.

இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு இன வழியாலும் மொழி வழியாலும் வரலாற்று வழியாலும் மிக நெருங்கிய உறவு நாடாகவுள்ள தமிழ்நாடும், இந்திய மேலின, மத வல்லாளுமை அரசுக்கு அடிமை நாடாக உள்ளமையால், இலங்கைத் தமிழர்கள் சிங்கள அரசின் இன அழிப்புக் கொடுமைகளுக்கு ஆளாவதை நேரில் கண்டும் கேட்டும், அதிர்ச்சியும் அவலமும் கொண்டாலும், அவற்றுக்குத் துயர்நீக்கமாக ஒன்றுமே செய்ய முடியாமல், கலங்கிக் கண்ணீர் வடித்துக் கண்டனம் தெரிவித்துத் தன் ஆற்றாமையைப் புலப்படுத்தும் அளவுடனேயே வழிமுறை காணாமல், வாய் புலம்பி வயிற்றில் அடித்துக் கொண்டு கிடக்கிறது.

இந்த நிலையில், இந்திய அரசின் ஓராளுமைத் தலைவியாக' உளவு வழியாகவும் களவு முறையாகவும் ஊராண்டு கொண்டுள்ள இந்திரா காந்தியம்மையார், ஏதோ, எடுத்தேன் கவிழ்த்தேன் என்றபடி இலங்கைத் தமிழர் சிக்கலில் தலையிட்டு, அரசியல் நிரவல் செய்வது போல் பாசாங்கு காட்டித் தமிழினத்திற்கு நிலையான ஓர் அடிமை முறி (சாசனம்) எழுத முற்பட்டுள்ளார். இவர் செயலிலும் பலர் நம்பிக்கை கொண்டு, தமிழீழக் கோரிக்கையைக் கையளித்து விடுவார்களோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது. தமிழீழ மக்களின் நெஞ்சாங் குலையிலிருந்து வெளியேறி அவர் தம் மூச்சுக் காற்றாக இயங்கிவரும் தமிழீழக் கோரிக்கை, எந்த அரசியல் தன்னலக்காரராலும் அல்லது ஓர் அணியினராலும் அவ்வளவு எளிதாகக் கை நெகிழ்க்கப்பட்டு விடப்படுமானால், உலகத் தமிழினத்துக்கு உலகின் எந்த நிலப்பகுதியிலும் எந்தக் காலத்திலும் உரிமை உயிர்த்துடிப்பே இல்லாமல் போய்விடும் என்பதை இவ்வுலக உருண்டையில் வாழும் ஒவ்வொரு தமிழரும் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். அத்தகைய ஒருநிலை அண்மையிலோ எதிர்காலத்திலோ எடபொழுதும் நிகழவே கூடாது. அப்படியொரு நினைவு, தப்பித்தவறி, தமிழீழ அணியில் தவறாகவோ சரியாகவோ வந்து நின்று கொண்டிருப்பவர் எவருக்கேனும் ஏற்பட்டால், அவரை இனங்கண்டு, எவ்வகைக் கண்ணோட்டமுமின்றி, விடுதலைப் போராளிகள் அப்புறப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

முடிவாகவும், முழுமையாகவும், தமிழீழ விடுதலைக் கோரிக்கை என்றோ உறுதி செய்யபபட்டுவிட்ட ஒன்று. மூலை மாறிகளாலும், சொல்மாறிகளாலும், கோட்பாட்டைத் திசை திருப்புவோர்களாலும், அவர்களின் தன்னல அங்காப்புக்கு நீர் வார்த்துக் கொள்ளும் நினைவுடன், அத் தமிழீழக் கோரிக்கை நெகிழ்ச்சி கொண்டுவிடக் கூடாது. தமிழீழக் கோரிக்கைக்கு மாற்றுக் கோரிக்கை அல்லது மாற்றுத் தீர்வு ஒன்று இருக்குமானால், அது தமிழீழக் கோரிக்கையே! வேறு எதுவாகவும் இருக்க முடியவே முடியாது. இது பனிமலை போலும், பசிபிக்கடல் போலும் உறுதியான கொள்கையும், போராட்டமும் ஆகும்! வெல்க தமிழீழப் போராட்டம்! விடுதலை பெறுக தமிழர் நிலம்!

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

சென்னை-5.

கழக முதல்வர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

அவர்களின்

ஐரோப்பியச் சுற்றுச் செலவு

வரும் 10-9-83 காரி (சனி)க் கிழமை, காலை 6 மணிக்குச் சென்னை, வானூர்தி நிலையத்தினின்று புறப்படும் (Indian Airlines) இந்திய வான் வழி எண்: 440 வானூர்தி வழியாக,

உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வரும்; 'தென்மொழி' 'தமிழ்நிலம்' 'தமிழ்ச்சிட்டு' ஆகிய இதழ்களின் ஆசிரியருமாகிய,

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தம் ஐரோப்பியச் சுற்றுச் செலவைத் தொடங்குகிறார்கள். சென்னையிலிருந்து புறப்படும் அவர்கள், அன்று இரவு 11-59 மணிக்குப் புதுதில்லியிருந்து செல்லும் (Air France) பிரான்சு வானூர்தி எண்: 179 வழியாக, பிரான்சு, இங்கிலாந்து, மேற்கு செருமனி முதலிய நாடுகளில் ஏறத்தாழ ஒரு மாதம் தம் சுற்றுச் செலவை மேற்கொள்ளுவார்கள்.

அக்கால், அம்மேலை நாடுகளில் நடைபெறவிருக்கும் திரு.வி.க. விழா, பெரியார் விழா முதலிய விழாக்களிலும், வேறு பல தமிழ்க் கழகங்கள், மன்றங்கள், தமிழீழ விடுதலை அமைப்புகள், தமிழர் முன்னேற்ற அமைப்புகள் முதலியவை ஏற்பாடு செய்யவிருக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கு கொள்வதுடன், அந்நாடுகளில் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கிளைகளையும் தொடங்கி வைக்க இருக்கிறார்கள்.

பாவலரேறு அவர்களை 10-9-83 அன்று காலை 6 மணிக்கு வாழ்த்தி வழியனுப்ப விரும்பும் அன்பர்கள் அன்று காலை 5 மணியளவிலேயே, சென்னை, பன்னாட்டு வானூர்தி நிலையம் (International Airport) வருமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சென்னை-5
2-9-83

மா. பொழிலன்
செய்தியாசிரியர்
உ.த.மு.க. தலைமைக் கழகம்,
சென்னை-5.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

எச்சரிப்பதும் இதுதான். ஒருவேளை, ஓரின உணர்வின் அடிப்படையில் செயவர்த்தனேயின் தமிழின அழிம்பு முயற்சிகளுக்கு ஆதரவாகவும், தமிழீழ விடுதலை நோக்கத்திற்கு எதிராகவும், இந்திரா காந்தி, நடுநிலைத்தீர்வு செய்வது போன்ற வெளிப்படை முயற்சியில், மறைமுகமாகவும் தந்திரமாகவும் செயல்பட்டு, செயவர்த்தனேயின் நோக்கத்திற்கு வெற்றியையும், தமிழீழக் கோரிக்கைக்குத் தோல்வியையும் ஏற்படுத்திக் கொடுப்பாரானால், அல்லது அதில் விரைந்து ஒரு நடவடிக்கையை மேற் கொள்ளாமல் ஒரு காலத்தாழ்வை இடையில் புகுத்தி, தமிழின உணர்வைத் தணிவிக்கும் சூழ்ச்சியில் ஈடுபடுவாரானால், அந்நிலை, இந்தியாவிலும் எதிரொலியை ஏற்படுத்தித் தனித்தமிழ்நாட்டுப் போராட்டத்திற்கு உரமிட்டது போல். ஆகும் என்று எச்சரிக்க விரும்புகின்றோம். ஓர் இனம் அடிமைத்தனத்தில் கொஞ்சங் கொஞ்சமாக அழிந்து போவதைவிட, உரிமைப் போராட்டத்தில் ஒரேயடியாக மாண்டு போவதையே நாம் விரும்புகிறோம். ஏனெனில் விடுதலையுணர்வு என்பது அடிமைப் பட்டுக் கிடக்கும் இனத்தில் இயல்பாகத் தோன்றுவது. அது வலுப்பெறுமானால், எத்துணைக் கொடுமையான வல்லாண்மைப் போக்கையும் எதிர்கொள்ளத் தக்கது என்பதை ஆள்பவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறோம்.

பல்லடம், திருக்குறள் மன்றம் காலத்தால் செய்த உதவி!

மதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு, வணக்கம். தங்கள் இல்லமும் அச்சகமும் புலனாய்வு இடப்பட்டும், அச்சகப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டதும் மிகவும் அதிர்ச்சி அளிப்பன; கண்டிக்கத் தக்கன: இற்றைச் சூழலில் தேவையற்றதும், பொருத்தமில்லாததாகவும் தெரிகிறது. இதனைக் கண்டிக்கும் வகையில் தலைமை அமைச்சர் தில்லிக்கும், முதலமைச்சர்-சென்னைக்கும் தொலைவரிகள் கொடுத்துள்ளோம். அதன் படிகள் இதனுடன் இணைத்துள்ளோம். மேலும் அதன் படிகளுடன், இச்செய்தியைப் பாராளுமன்றத்தில் எழுப்பிக் கண்டிக்கச் செய்யும் படியும் எங்கள் கோவைத்தொகுதி பா.ம.உறுப்பினர் திரு.இரா.மோகன் அவர்களுக்கு ஒரு பதிவு அஞ்சல் அனுப்பியுள்ளோம்.

நாங்களாக எண்ணிச் செய்த இவை தவறல்ல, என்று செய்தோம். தங்களின் இவை பற்றிய கருத்தும் எழுதுங்கள் இனி அடுத்துச் செய்ய வேண்டும் போது உதவியாக இருக்கும்.

உலகத் தமிழின முன்னேற்றத்திற்காக ஒலித்துக் கொண்டிருக்கும் ஒரே ஓர் உண்மைக்குரலும் எதனாலும் ஓய்ந்து விடக்கூடாது.

மொழி, இனம், நாடு என்று ஓயாது ஒழியாது ஒரே பாதையில் சென்று கொண்டிருக்கும் தங்களின் வழிச்செலவு (பயணம்) எதனாலும் தடைப்படவோ நிற்கவோ கூடாது

தங்களின், உண்மைக்குரல் ஓயாமல் ஒலிக்கவும், வழிச்செலவு சலியாமல் தொடரவும் எங்களால் இயன்றன என்றும் செய்வோம். தடையின்றித் 'தமிழ் நிலம்', 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' வெளிவரச்செய்யுங்கள். வணக்கம்.

— மா. ஆறுமுகம், தலைவர் திருக்குறள் மன்றம்,

உலகத் தமிழர்களே ஒன்றுபடுவோம்!

உலக உருண்டையில் நமக்கென முழு ஆளுமை கொண்ட ஒரு நாடு சமைப்போம்!

ஈழம் மலர எழுக!

— விடியல் விரும்பி

செங்குருதி பாய்கிறது ஈடு மண்ணில்
செந்தமிழர் உடைமைகளும் வீழும் ஆங்கே
பொங்குதனல் வயப்பட்டுப் பொசுங்கிப் போகப்
பொழுதெல்லாம் தமிழனது குருதி தேடிச்
சிங்களத்தின் ஓநாய்கள் ஆண்மை யில்லாச்
சிறுநரிகள் தமிழினத்தைக் கருவ றுக்கப்
பொங்கியெழுந் தார்ப்பரிக்கும் நிலைமை கண்டும்
பூனைகளாய் மறத்தமிழர் பதுங்க லாமோ?

பொட்டிழந்தும் பூவிழந்தும் தமிழப் பெண்டிர்
புலம்புகிறார்; கலங்குகிறார்; சிலரோ அங்கே
வெட்டவெளிப் பொட்டலிலே கற்பி ழந்தே
வேகின்ற பெருநெருப்புக் கெண்ணெய் ஆனார்!
கட்டாயம் இதுபோலச் சிங்க ளத்துக்
காடையரின் பெண்டிர்களும் துடிது டிக்க
நட்டநடுத் தெருவினிலே அலைக்க ழித்து
தாய்களைப்போல் இழுத்தெறிய வேண்டும் தீயில்!

துடிக்கிறது குருதியெலாம்; விம்மு கின்ற
தோளிரண்டும் புடைக்கிறது: கண்ணி ரண்டும்
வடிக்கின்ற நீரின்னும் வற்ற வில்லை;
வாய்க்கொழுப்புச் செய்வர்த்தன் ஆட்சி நாளும்
நடிக்கிறது உலகின்முன்; நம்ப வேண்டா;
தமக்கென்ன விலங்கிடத்தில் பேச்சுத் தீர்வு?
கொடியுயர்த்தி நெடுஞ்செலவைத் தொடர்வோம்; வேண்டும்
குடியுரிமைத் தமிழீழம் மலரச் செய்வோம்!

தமிழீழம் இல்லையெனில் தமிழி னத்தின்
தன்மானம் பறிபோகும்: உரிமை சாகும்!
உமிழ்நீரின் இழிவாக எண்ணத் தக்க
ஒருயிரும் தமிழனது தானே? வெட்கம்!
உமிகூட விலைபோகும்; தமிழன் பெற்ற
உயிருக்குத் துளியேனும் மதிப்பே இல்லை!
இமிழ்கடலும் தடுத்திடுமோ நம்மை? இன்றே
இனமான உணர்வேந்தி எழுக நன்றே!

எதிர் அணியில் இருந்தாலும் தமிழரைப் பொறுத்த அளவில் பார்ப்பனர் அனைவரும் ஒருவரே!

'எதிர் எதிரான இரண்டு அணியில் இருந்தாலும் தமிழரைப் பொறுத்த வரையில் பார்ப்பனர்கள் ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுத்து விடவும் மாட்டார்கள்; விட்டுக் கொடுக்கவும் மாட்டார்கள் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு : -

'துக்ளக்' இதழ் 15-8-83.

'கேள்வி பதில்' — பகுதி :

கே இலங்கையில் தமிழர்கள் அல்லாமல் வடஇந்தியர்கள் தாக்கப்பட்டிருந்தால் இந்திரா என்ன செய்திருப்பார்?

ப. : இதைவிட அதிகமாக எதுவும் செய்திருப்பார் என்று **நான்** நினைக்க வில்லை; (பிறர் அவ்வாறு நினைக்கலாம் என்பது குறிப்பு.) 'தமிழர்தானே ? நமக்கென்ன?' என்று நினைத்து இந்திரா இப்போது செயல்படவில்லை என்பதே **என்** அபிப்பிராயம். (பிறர் அபிப்பிராயம் வேறாக இருக்கலாம் என்பது குறிப்பு.)

நம்பலாமா?

தரங்கை பன்னீர்ச் செல்வம்

நெருப்புவிழி சிமிழ்க்கின்றாய்; நெஞ்சால் சீறி
நெடுந்தீயால் கொடுங்கரிசன் கொளுத்து கின்றாய்;
கருப்புடைகள் அணிந்துகொண்டாய், ஈழம் மீட்கக்
கையுயர்த்தி முழக்குகின்றாய்; கட்சிச் சார்பில்
செருப்புமழை சிங்களன்மேல் பொழியச் சொல்லிச்
செந்தமிழ்ப்பா இசைக்கின்றாய், வரலாற்றேட்டின்
திருப்புமுனை என்றறியாப் பேதை யோரே
தில்லியரை இனங்காக்க நம்ப லாமோ?

கருக்கரிவாள் மீசையனே, கனலும் கண்ணோய்!
சாவுக்கும் சாவுக்கும் கலங்கா நெஞ்சே!
அரக்கமனச் சிங்களவர் பிடியி னின்றே
அருந்தமிழ ஈழத்தை மீட்ப தற்கே
இரக்கமிலா இந்திராவை வேண்டு கின்றாய்!
'இந்தியாவே இந்திராதான்' என்று கூறி
நெருக்கடித்தீச் சட்டத்தால் தமிழா உன்னை
நிலைகுலையச் செய்தவளா, உதவி செய்வாள்?

விளைக போர்!

— 'தமிழ்ச் சுடர்' மணி மூத்து

ஈழந்தான் எரிகிறதே! எங்கள் நெஞ்சும்
எரிகின்ற தையய்யோ, கொழுந்து விட்டே!
வாழ்வதற்கு வழிதேடித் தவித்த மக்கள்
வாளரக்கன் பிடியினிலே சிக்கி மாண்டு
வீழும்நிலை யாகிவிட்ட தேனோ? அந்த
வீணர்களை அடக்கத்தான் இந்தி ராவைச்
சூழ்ந்துபிடித் திருக்கின்ற சுணக்கம் மாறச்
சுருக்கான வழியொன்றைச் செயமாட் டாரா?

கட்டெறும்பை நசுக்கல்போல் எம்மி னத்தைக்
காட்டுவிலங் காண்டிகளாம் சிங்க ளத்தார்
சுட்டபடி ஒழிக்கின்றார்; தட்டிக் கேட்டுச்
சுறுசுறுப்பாய் வினையாற்றி அடக்கி வைக்க,
மட்டில்லாக் கொடுமைகளை மடக்கி வைக்க
மாவுலகில் எவருமில்லை என்னே! என்னே!
கட்டிளைஞர் நீந்தியந்தக் கடல்க டந்து
கணக்காகச் செயல்முடிக்கத் துடிக்கின் றாரே!

பாலூட்டும் தாய்க்குலங்கள் குருதி சிந்தப்
பச்சையிளங் குழவிகளோ கதறி நிற்க,
வாலாட்டிப் படுகொலையைச் செய்யும் அந்த
வன்மைமிகு சிங்களத்தார் நெஞ்சைக் கீறிக்
கோலாட்டம் போட்டால்தான் ஆறும் உள்ளம்!
கொடுமையிலும் கொடுமையிதே அய்யோ அய்யோ!
வேலாட்டம் முன்னாலே வெற்றுப் பேச்சு
விளைத்திடுமோ நற்பயனை? விளைக போரே!

எங்கையில் விலங்கிலையேல்!

அரத்தவெறி பிடித்தவனே 'சீ'வர்த்தனா—வெறி
அடங்கியதா இல்லையா—சீவர்த்தனா?
உரத்தகுரல் முழங்குகிறாய் சீவர்த்தனா—உன்
உயிரென்ன மிகவலிதா சீவர்த்தனா?

தமிழர்களைத் தீயிலிட்டாய் சீவர்த்தனா—அத்
தணலென்றும் ஆறாதே சீவர்த்தனா!
தமிழர்களின் பிணங்குவித்தாய் சீவர்த்தனா—அத்
தரைகண்ட கறைபோகா சீவர்த்தனா!

குட்டிமணி கண்ணெடுத்தாய் சீவர்த்தனா—பின்
கொலைசெய்தாய் கொடியோனே சீவர்த்தனா!
சட்டமுனைக் காவாதே சீவர்த்தனா—ஒரு
சாக்காலம் எவர்க்குமுண்டு சீவர்த்தனா!

தமிழ்ப்பெண்டிர் என்செய்தார் சீவர்த்தனா—உன்
தரம்தெறிந்து போனதடா சீவர்த்தனா!
தமிழ்ப்பெண்டிர் கற்பழித்தாய் சீவர்த்தனா—உன்
தாய்நேர்மை தெரிந்ததடா சீவர்த்தனா!

எங்காலில் தளையிலையேல் சீவர்த்தனா—உனை
என்னசெய்வோம் தெரியுமாடா சீவர்த்தனா?
எங்கையில் விலங்கிலையேல் சீவர்த்தனா—உனை
என்செயினும் தகுமேடா சீவர்த்தனா!

— த. அன்பழகன்

பாராட்டுக்கு உரிய இராமாராவ்!

தில்லியில் 30-6-83' ஆம் பக்கல் நடந்த எதிர்க் கட்சிகளின் கூட்டுக் கூட்டத்தில் ஆந்திர முதல்வர் இராமாராவின் உள்ளத்திலிருந்து உதிர்ந்த சொற்கள் உண்மைக்கு உரமாய் அமைந்துள்ளன.

அவர் மக்களுக்குப் பணியாற்றுகிற உரிமை மாநில அரசுகளிடமிருந்து புறக்கணிக்கப்பட்டுள்ளது. மாநில அரசுகளுக்கு நீங்கள் என்ன செய்ய இருக்கிறீர்கள் என்று கேட்டால் மாநில உணர்வைத் தூண்டுவதாக குற்றம் சாட்டுகிறார்கள்.

மற்றும், **'மக்களுக்காக உரிமை கேட்கின்றவர்களைத் தேச இரண்டகம் செய்கிறவர்கள் — பிரிவினைவாதிகள்** என்று நடுவணரசினர் குற்றம் சுமத்துகிறார்கள். இது மிகவும் இழிவான கோழைத்தனமான செயல்!

தன்னுடைய வலிவின்மையை மறைக்கவும், நம்முடைய வலுவைக் குறைக்கவும் இந்த முயற்சியைச் செய்கிறார்கள்.

இந்த நிலைமையை எதிர்க் கட்சிகள் மக்களிடம் உணர்த்த வேண்டும். தவறான கொள்கைகளைப் பரப்பி மக்களிடையே செயற்கையான குழப்பத்தை இந்திராப் பேராயம் செய்கிறது"

நான் பிறவியில் இந்தியன் — பிறகுதான் தெலுங்கன் என்று அவர் சொன்னாலும் தம் உள்ளுணர்வுகளை வெளிப்படையாகச் சொல்லியுள்ளமை பாராட்டுக்குரியது தானே —

— **தாரை. தமிழ்வென்றி,**
அடிப்படை : தினகரன் 1-7-83.

உங்கள் ஊரில் 'தமிழ் நிலம்'

உங்கள் ஊரில் 'தமிழ் நிலம்' கிடைக்கவில்லையா? அது கிடைக்கும்படி நீங்கள் ஏன் முயற்சி செய்யக் கூடாது? உங்கள் ஊர் செய்தித் தாள் விற்பனையாளரிடம் அதை வரவழைக்கச் செய்யுங்கள். இல்லையானால் நீங்களே வரவழைத்து அன்பர்களுக்குத் தரலாமே! 10 உருபா அனுப்புங்கள். இருபது படிகளை (Copies) அனுப்புகிறோம். ஒன்று 65 காசுக்கு விற்று மிகுதிக் காசை உங்கள் செலவுகளுக்கு ஈடு கட்டிக் கொள்ளுங்கள்! அது பற்றி இன்றே எண்ணிப் பாருங்கள்.

உ. த. மு. க. வின் உயர்ந்த கொள்கைகள் :

- தாய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை - இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைதோறும் வெளிவரும். பதிவு எண்: TN/MS/C)/657

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5

பெறுநர்.
திரு.

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.

அரசி - நிலவன்
வாழ்க்கைத் துணை ஒப்பந்த விழா

தமிழகப் பெரியார் பெருந் தொண்டர் திரு சக்திமோகன அவர்களின் திருமகள் செல்வி அரசி (இராணி)க்கும், மலேசியா, கோலாலம்பூர் திராவிடர் கழகக் கிளைக்கழகச் செயலாளர் திரு. ஆ. பெரியசாமி அவர்களின் திருமகன் செல்வன் நிலவன் (சந்திரன்) அவர்களுக்கும், கடந்த 10-7-83 காலை 11 மணியளவில், கோலாலம்பூரில் சர்பகுரு மண்டபத்தில் வாழ்க்கைத் துணை ஒப்பந்த விழா இனிது நடந்தது.

விழாவில் தமிழகத்திலிருந்தும் சிங்கப்பூரிலிருந்தும் மலேசியாவின் பல மாநிலங்களிலிருந்தும் அறிஞர்கள் பலரும், கழக முன்னணியர்களும் வந்து கலந்து கொண்டனர்.

திராவிடமணி மு. நல்லதம்பி அவர்கள் தலைமையில், மலேசியத் திராவிடர் கழகத் தலைவர் திருச்சுடர் கே. ஆர். இராமசாமி அவர்கள் மணவிழா உறுதி மொழி பெற, மணவிழா ஒப்பந்த நிகழ்வு இனிது நிறைவேறியது. திருவாளர்கள் நா. இலட்சுமணன், அ. மருதமுத்து முதலியோர் மணமக்களை வாழ்த்தி நல்லுரைகள் வழங்கினர்.

தமிழகத்தினின்று உ.த.மு.க. முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார், தி.க. பொதுச்செயலாளர், கி. வீரமணி, துணைப் பொதுச் செயலர் கோ. சாமிதுரை, நெ. து. சுந்தரவடிவேலு, மருத்துவர் சி. என். ஏ. பரிமளம், எசு. ஓ. கே. உபயதுல்லா, புலவர் ஆறுமுகனார், மலேசியப் பாவலர் சோமசன்மா, தொண்டு வீராசாமி, பெரியார் சம உரிமைக் கழக அமைப்பாளர் ஆனைமுத்து முதலிய பெருமக்களிடமிருந்து வந்த வாழ்த்துரைகள் படிக்கப் பெற்ற பின்னர், திருவாளர்கள் சக்தி மோகன், பெரியசாமி, திருவாட்டி முத்தாச்சியம்மாள் நன்றி கூறலுடன் விழா இனிது நிறைவுற்றது. அதைத் தொடர்ந்து இனிய இன்னிசை விருந்தும், அறுசுவை விருந்தும் வழங்கப் பெற்றன.

அன்பர்கள் கவனிக்க..

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்களை, கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாட்களில் மாலையில் 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

— அமைச்சர்.

"அ.தி.மு.க (ம.கோ.இரா) ஆட்சி கவிழுமா?
கேள்விப்படுகிறோம்! உண்மையா?

— நம் சிறப்பு செய்தியாளர் —
சங்க தமிழ்ச் செல்வன்

நம்சிறப்பு செய்தியாளர் கடந்த ஆகத்து 15,16,17 பக்கலில் சென்னை நகரைச் சுற்றிப்பார்த்துக் கேள்விப் பட்ட அளவில்பின்வரும் செய்திகளைத் தந்துள்ளார்.

அ.தி.மு.க கட்சியில் பார்ப்பனிய எதிர்ப்புணர்வு அதிகப்பட்டு வருகிறது. எனினும் அங்குப் பார்ப்பனியத்தின் வல்லாண்மையும் மிகுந்து வருவதாகத் தெரிகிறது. அதனால் ஓரிரண்டு தன்மான அ.தி.மு.க தலைவர்கட்கும் மதிப்பு இல்லாமல் இருக்கிறது.

மேலும் அமைச்சர்கள் சிலர் (காளிமுத்து போன்றவர்கள்) ஈழத்தமிழ்நாட்டு விடுதலைக்குத் தூண்டு கோலாக இருக்கின்றனராம்: மேலும் இலங்கையில் அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலோரின் உறவினர்கள் படுகொலைக்கும், பெரும் இழப்புக்கும் ஆளாகிஉள்ளனராம்.

'தமிழ்நாட்டு முதல்வரோ மறைமுகமாக, செயவர்த்தனவிற்கு ஆதரவு கொடுப்பதால், இதனையெல்லாம் கண்டு கொள்ளாமல் வாளாவிருக்கிறாராம்' இதற்கு முன்னோடியாக மதுரையில் நடந்த உலகத்தமிழ்மாநாட்டில் தமிழர்களின் இன்னலைப்பற்றிக்கூறிய அமிர்தலிங்கம் அவர்களை ம.கோ.இரா வன்மையாகக் கண்டித்துள்ளார் என்பது நினைவு கூறத்தக்கது'

அ.தி.மு.க இந்திரா கட்சியுடன் இணைப்பா —?

அ.தி.மு.கவிலிருந்து இனஉணர்வால் 70 சட்டமன்ற உறுப்பினர்கள் விலகவிருக்கின்றனர், என்று கேள்விப்படுகிறோம் இதனால் ஏற்படவிருக்கும் சரிவினைச் சரிகட்ட ம.கோ.இரா அ.தி.மு.கவை அரியானாவில் நடந்தது போல இந்திராப் பேராயக் கட்சியுடன் இணைத்துவிட உறுதிபூண்டுள்ளதாகவும் தெரிகிறது'

இதற்கு மேலும் சில தன்மானமுள்ள மூத்த அமைச்சர்கள் பார்ப்பன வல்லாண்மைக்கு அடிபணிய மறுத்துக் கட்சியை விட்டு விலக இருப்பதாகவும் தெரிகிறது' இதற்கு மேலும் சட்டமன்ற உறுப்பினர்களும் மேலவைஉறுப்பினர்களும் ஆதரவு தெரிவிப்பதாக தெரிகிறது:

அனைத்திற்கும் தற்போது ஈழத் தமிழர்கட்கு ம.கோ.இரா, இந்திரா பெருந்தீங்கு விளைவித்து விட்டனர் என்ற காரணியத்தால் அவ்வாறு வெளியேறி வரலாம் என்று உறுதிப்படுகிறது:

இந்நிலை நடைபெறுமானால் ம.கோ.இராவுடன் எஞ்சிய 30,40 சட்டமன்ற உறுப்பினர்கள்தாம் இருப்பார்கள்: எனவே எந்நேரத்திலும் தமிழக அமைச்சரவை கவிழலாம் என்று பேசிக் கொள்ளப்படுகிறது:

இதற்கு முன்னோடியாகத் தமிழக ஆளும் கட்சி உறுப்பினர்கள் மறைமுகமாகப் பொதுக் கூட்டங்களில் முதல்வரைச் சாடத் தொடங்கியுள்ளனர்.

மேலும் அ.தி.மு.க செயற்குழுவில் தஞ்சையைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் ஈழத்தமிழர் செய்தியில் இந்திராவை எதிர்ப்பதையே தமிழக மக்கள் விரும்புகின்றனர்' எனவே மக்கட்காக இந்திராவை எதிர்க்க வேண்டுமென்று கூறியுள்ளாராம்;

மேலும் ம.கோ.இரா மதுரை நெடுமாறனுக்கு ஏற்படுத்திய மூக்கறுப்பு ஆளுங்கட்சி மதுரைத் தலைவர்கட்கு வெறுப்பு ஏற்படுத்தியுள்ளதாம்.

இந்நிலையில் அ.தி.மு.க ஆட்சி எந்நேரத்திலும் கவிழலாம் எனத் தெரிகிறது' ஆனால் இதனை எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் விரும்பவில்லை என்றும் தெரிகிறது. ஏனெனில் அ.தி.மு.க ஆட்சி கவிழ்ந்தால் தமிழர்களின் நிலைமையை இதைவிட இன்னும் கீழாகச் சீரழிக்க இந்திராப் பேராயக்கட்சி அணியமாக உள்ளது.

மேலும் ம.கோ.இரா. அரிசித் தட்டுப் பாட்டில் தாமே பதவி விலகிட இருப்பதாகவும் தெரிகிறது.

இரண்டிலொன்று பார்ப்போம்!

பாவலர் இளஞ்சேத்திரன்.

ஏதிலிகள் தமிழரிங்கு! நாடிலிகள் என்று
இலங்கைவெறிச் சிங்களவன் நினைத்துவிட்டான்! ஒன்றும்
தோதிலிகள்! யாரிவர்க்குப் பரிந்துவந்து நம்மேல்
தொடுத்திடுவார் போர்? நம்மைக் கேட்களவர் உண்டு?
மேதினியில் எனநினைத்துத் தாறுடும் இனத்தை
வேட்டையிட்டு வருகின்றான்? கொன்றுகுவிக் கின்றான்!
காதிலிகள்! கண்ணிலிகள் நாமா? நம் படையைக்
கால்இலங்கை மேலனுப்ப எந்நேரம் ஆகும்?

வீடிழந்தார்! மனைஇழந்தார்! மக்களையும் இழந்தார்!
வீதியிலே வெட்டுண்டு கொலையுண்டு வீழ்வார்!
நாடிழந்தார் போன்றவரை விரட்டியடிக் கின்றான்!
நாய்நரிக்கும் கழுகுக்கும் இரையாக்கு கின்றான்!
காடிழந்தார்! கைகால்கள் இழந்தார்! தம் பெண்டிர்
கற்பிழந்தார்! பகைத்திறப்பார்! எனினும் தம் கொள்கைப்
பிடிழந்தார் இல்லை! வெறிச் சிங்களனை எதிர்த்துப்
பெரும்போரைச் செய்கின்றார் விடுதலையை நினைந்தே!

வீட்டோடு தீவைத்துக் கொல்லுகின்றான்! கடைகள்
வீடுகளைச் சூறையிட்டுச் செல்லுகின்றான்! ஐயோ!
வேட்டோடு வேட்டுவைத்துத் தமிழ்ப்பகுதி எங்கும்
வெறியாட்டம் ஆடுகின்றான்! தமிழரழி கின்றார்!
கேட்டோடு போகவுள்ள சிங்களத்தான் அரசில்
கேள்விமுறை இல்லை! நம இனம்மீள வேண்டும்!
கூட்டோடு மடியஅவன் குலம்வீழப் போரில்
குதித்திடுவோம்! இரண்டிலொன்றுபார்த்திடுவோம் நாமே!

தமிழினத்தைச் சூது கவ்விக் கொண்டிருக்கிறது!
அது காலப் போக்கில் உலக மக்களுக்குத் தெரியவரும்!
பாவலரேறு பெருஞ்சித்திரனார்!
அவர்களின் குறிப்பு விளக்கம்!

இலங்கையில் ஏற்பட்டுவரும் தமிழின அழிவு தொடங்கியதிலிருந்து, பாவலரேறு அவர்களை வெளியூர்த் தமிழன்பர்கள் பலரும் அன்னாரிடம் வந்து சந்தித்து; அவ்வப் பொழுதுள்ள நிலைகளைப் பற்றிக் கலந்துபேசிக் கருத்துகளைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

ஒருமுறை பாவலரேறு, அந்த அன்பர்களிடம், கருத்துக் கூறுகையில், 'செய்தித்தாள்களில் இப்பொழுது பரபரப்பாக வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகள் அனைத்துமே உண்மையில்லை. சில செய்திகள் உண்மையாக இருந்தால், அவற்றின் அடிப்படைகள் திரித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. சிலவற்றின் நோக்கங்களே வேறுவகையானவை, சூழ்ச்சிகளுடன் அவை நன்கு புனையப்படுகின்றன. பெரும்பாலும் செய்திகளே இப்படித்தாம் என்றாலும், இப்பொழுதுள்ள அரசியல் சூழ்நிலையில், தமிழீழக் கொடுமைகளைப் பற்றிவரும் — அல்லது அறிவிக்கப்படும் செய்திகளில் சூழ்ச்சிகள் நிரம்ப உள்ளன. அவை முழுவதும் தந்நலத்தை அடிப்படையாகக் கொண்டவை. பொதுவாகச் சொன்னால் இலங்கைத் தமிழினத்தை இப்பொழுது இனக் கொடுமைகள் மட்டும் சூழ்ந்திருக்கவில்லை; சூதுகளும் கவ்வியிருக்கின்றன. அந்தச் சூதுகள் தமிழினத் தலைவர்கள் எனப்படுவோராலேயே பின்னப்படுகின்றன என்பதுதான் அங்கு நேர்ந்து வரும் கொடுமைகளை விட வருத்தம் தருவனவாக உள்ளன. இவற்றின் அடித்தளங்கள் பொதுமக்களுக்கு எளிதே உடனடியாக விளங்குவதில்லை. ஆனால் காலப் போக்கில் அவை தாமே விளக்கம் பெறும்; உண்மை அப்போது வெளிப்பட்டே தீரும்அக்கால் போலி அரசியல் நாடகங்களில் கதை நாயகர்களாகவும், திறம்பட்ட அரசியல் மேதைகளாகவும் வீரர்களாகவும் நடித்துக் கொண்டுள்ளவர்களின் போலிப் புனைவுகள் முகப்பூச்சுகள் கலைந்துவிடும். அதுவரை தமிழினத்தின் எல்லா நிலைக் கொடுமைகளையும் தமிழீழ மக்கள் தாங்கிக் கொண்டுதான் ஆகவேண்டும்.

இவற்றின் உண்மைநிலை என்னவென்றால் தமிழினம் பிறரால் தாக்கப்படும் நிலையைத் தலைமைப் பொறுப்பில் உள்ள ஒரு சில தமிழ்த் தலைவர்களே தங்களுக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதுதான்? இப்பொழுது அந்நிலைகளை வெளிப்படையாகக் கூறுவது அவ்வளவு நல்லதன்று: அவை தாமாகவே வெளிப்படும் காலம் வரும்வரை நாம் காத்திருப்பது நல்லது. இப்பொழுது உண்மையாக நடித்துக் கொண்டிருப்பவர்களின் முகமூடிகள் அப்போது அகற்றப்பட்டு. அவர்களின் உண்மை வடிவங்கள் உலக மக்களுக்கு வெட்ட வெளிச்சமாகும்.

அப்பொழுது. எல்லாமக்களுக்கும், ஒரு பேரதிர்ச்சியும், பெருவியப்பும் ஏற்படவே செய்யும்! பொறுத்திருந்து பாருங்கள்' என்றார்.

— நம் தலைமையகச் செய்தியாளர்.

தில்லியொடு நமக்குறவு எதற்காகத் தேவை?

— பாவலர். சீனப்பனார்
கொம்மக் கோவில்

கொடுமையடா! கொடுமையடா! படுகொடுமை! கொடுமை!
குலைநடுங்கும் உடல்நடுங்கும் உயிர்நடுங்கும் கொடுமை!
எடுத்தேட்டில் எழுதவொணா வன்கொடுமை! கொடுமை!
எடுத்துரைப்போர் கண்கலங்கி வாயடைக்கும் கொடுமை!
அடுக்காத வெங்கொடுமை! சிங்களவர் கொடுமை!
அனைத்துலக வரலாற்றில் இல்லாத கொடுமை —
தடுக்காத தில்லிவட வரசோடு இன்னும்
தேவையா? நமக்குறவு! எதற்காகத் தேவை?

தமிழினத்தின் பெரியோரே! தலைவர்காள்! அன்புத்
தாய்க்குலமே! துடிப்போடு ஈகவுளத் தோடே
அமிழாத மறவுணர்வு கொண்டிட்ட நத்தம்
அருமையினத் தலைமுறைகாள்! தில்லியரசோடு
நமதினத்திற் கேனுறவு? எதற்காகத் தேவை?
நம்மையது மதிக்கிறதா? உதவிபுரி கிறதா?
குமுறுகிற உணர்வாலே கேட்கின்றேன் உம்மை!
கூறுங்கள் தேவையா? எதற்காகத் தேவை?

இனத்தோடு இனஞ்சேர்ந்த நிலைதன்னைக் கண்டும்
இந்நாட்டு ஆரியத்தின் போக்குணர்ந்த பின்பும்
மனமார நமைவெறுக்கும் செயல்கண்ட பிறகும்
வடநாட்டு அரசோடு நமக்கென்ன உறவு?
அனைத்தாலும் வேறான வடவரொடு இன்னும்
அருந்தமிழர் இணைந்திருக்க ஏன்வேண்டும்? வேண்டும்?
முனைப்போடு செயல்புரிவோம் அடிமைவிலங் கொடிப்போம்!
விடுதலைக்குப் போரிடுவோம் தனிநாடு காண்போம்!